# Joint Press Release - 10th India-EU Human Rights Dialogue

July 15, 2022

---

## கூட்டு செய்தி வெளியீடு – 10 வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மனித உரிமைகள் பேச்சுவார்த்தை

ஜூலை 15, 2022

10-வது இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய மனித உரிமைகள் பேச்சுவார்த்தை 2022 ஜூலை 15 அன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் அனைத்து மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தின. இந்தப் பின்னணியில், வெளிப்படையான மற்றும் ஜனநாயக சமூகங்கள் என்ற முறையில், அனைத்து மனித உரிமைகளின் உலகளாவிய தன்மை, கூறுபடாததன்மை, ஒன்றையொன்று சார்ந்திருப்பது மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக இருப்பது முதலியவற்றை வலியுறுத்தின.

2. பல்வேறு மனித உரிமைகள் பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் இந்த பேச்சுவார்த்தையில் மேற்கொள்ளப்பட்டன. 2021 ஏப்ரலில் நடந்த கடைசி பேச்சுவார்த்தைக்குப் பிறகு பங்கேற்பாளர்கள் இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் தங்கள் அணுகுமுறைகள், முயற்சிகள் மற்றும் சாதனைகள் குறித்து எடுத்துக்கூறினர்

3. சமூக மற்றும் அரசியல் உரிமைகள், சிறுபான்மையினர் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய கூட்டத்தைச் சேர்ந்த நபர்களின் உரிமைகள், மத அல்லது நம்பிக்கை சுதந்திரம், ஆன்லைன் மற்றும் ஆஃப்லைனில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம், பெண்களுக்கு அதிகாரமளித்தல், குழந்தைகள் உரிமைகள், எல்ஜிபிடிக்யூஐ+ உரிமைகள், குடிபெயர்ந்தோரின் உரிமைகள், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், பாதுகாப்பு பிரச்சனைகள் மற்றும் மனித உரிமைகள், வணிகம் மற்றும் மனித உரிமைகள், பொது சுகாதாரத்தில் ஒத்துழைப்பு, மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு நிவாரணம் ஆகிய பிரச்சினைகள் குறித்து இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் கருத்துகளையும் கவலைகளையும் பரிமாறிக்கொண்டனர்.

4. மனித உரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட குடிமைச் சமுதாய செயற்பாட்டாளர்களின் சுதந்திரம், தன்னுரிமை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாத்தல், குழும உரிமையையும், அமைதியான முறையில் ஒன்றுகூடும் உரிமையையும் மதித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர்கள் இருவரும் ஒப்புக்கொண்டனர். ஐரோப்பிய ஒன்றியம் அனைத்து சமயங்களிலும் எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் மரண தண்டனைக்கு எதிரான அதன் எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்தியது. அனைத்து நாடுகளிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் பொருந்தக்கூடிய தனித்துவமான, உலகளாவிய, தவிர்க்க முடியாதமற்றும் அடிப்படை மனித உரிமையாக வளர்ச்சிக்கான உரிமையை அங்கீகரிக்கும் தனது உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியது.

5. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் தரங்களின் பிரகாரம், மனித உரிமைகள் பிரச்சினைகளில் அதிக கவனத்தை செலுத்தவேண்டியதன் அவசியத்தை இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்தன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும், தேசிய மனித உரிமை நிறுவனங்கள், குடிமைச் சமுதாய செயற்பாட்டாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்களின் முக்கிய பாத்திரத்தையும் இரு தரப்பினரும் அங்கீகரித்தனர்.

6. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் குறித்த ஐ.நா.வின் வழிகாட்டும் கொள்கைகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பரிமாறிக்கொண்டனர். ஐரோப்பிய ஒன்றியமானது, கார்ப்பரேட் நிலைத்தன்மை குறித்த அதன் சமீபத்திய திட்டங்கள் குறித்து இந்தியத் தரப்பிற்குத் தெரிவித்தது. வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் குறித்த அதன் முதல் தேசிய செயல்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தியா தெரிவித்தது. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் பகுதியில் அதன் ஒத்துழைப்பை இன்னும் அதிகரிக்கும்.

7. முழுநிறை காலமுறை மீளாய்வு (UPR) செயல்முறை மற்றும் மனித உரிமைகள் பகுதியில், குறிப்பாக ஐ.நா பொதுச் சபை மற்றும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை (UNHRC) ஆகியவற்றில் சர்வதேச அளவில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை உள்ளடக்கிய பலதரப்பு கூட்டணிக்கான தங்கள் உறுதிப்பாட்டை

அவர்கள் இருவரும் மீண்டும் வலியுறுத்தினர். ஜெனிவாவை தளமாகக் கொண்ட ஐ.நா.வுக்கான இந்திய நிரந்தர தூதரகங்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிரந்தர தூதரகங்கள் தங்கள் பேச்சுவார்த்தைகளைத் தொடரும் மற்றும் 50 வது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வின் ஒருபுறம் பாலின சமத்துவம், நீர் மற்றும் சுகாதாரம் குறித்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து மேலும் கூட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும்.

8. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஜனநாயகம், சுதந்திரம், சட்டத்தின் ஆதிக்கம் மற்றும் மனித உரிமைகளுக்கான மரியாதை போன்ற பொதுவான கொள்கைகள் மற்றும் மதிப்புகளுக்கு தங்கள் நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தின. இந்தியாவும் ஐரோப்பிய ஒன்றியமும் 2023 ஆம் ஆண்டில் அடுத்த மனித உரிமைகள் பேச்சுவார்த்தையை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

9. மனித உரிமைகள் பேச்சுவார்த்தைக்கு இந்திய வெளியுறவு அமைச்சின் மேற்கு ஐரோப்பாவின் இணைச் செயலாளர் திரு. சந்தீப் சக்ரவர்த்தி மற்றும் இந்தியாவுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதர் திரு. உகோ ஆஸ்டுடோ ஆகியோர் தலைமை வகித்தனர்.

புது டெல்லி
ஜூலை 15, 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.